# Aadhavaa Publications

## சமூக அறிவியல்

## மாதிரி வினாத்தாள் - 3

## பத்தாம் வகுப்பு

---

காலஅளவு : 15 நிமிடம் + 3 மணி மதிப்பெண்கள்: 100

பகுதி-1

அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும். **14x1=14**

1. கூற்று: 1884-85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.
   காரணம்: ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.
   அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி
   ஆ) கூற்று சரி ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல
   இ) கூற்று காரணம் ஆகிய இரண்டுமே தவறு
   ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் கூற்றுடன் பொருந்தவில்லை
2. அணிசேரா இயக்கத்தின் மாநாட்டில் இந்திய பிரதிநிதியாக கலந்து கொண்டவர்......
   அ) லால்பகதூர் சாஸ்திரி ஆ) மோதிலால் நேரு
   இ) ஜவஹர்லால் நேரு ஈ) வல்லபாய் படேல்
3. i. மிக முன்னதாகவே வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812 இல் வெளியிடப்பட்டது.
   ii. பனையோலைகளில் எழுதப்பெற்ற பல்வேறு தமிழ் இலக்கண இலக்கிய கையெழுத்துப் பிரதிகளை மறைமலையடிகள் சேகரித்துத் தொகுத்தார்.
   iii. இராபர்ட் கால்டுவெல் திராவிட மொழிகளுக்கும் சமஸ்கிருதத்திற்கும் இடையில் இல்லாத ஒப்புமை திராவிட மொழிகளுக்கிடையே நெருக்கமாக நிலவுவதை நிரூபித்தார். தமிழின் தொன்மையையும் நிரூபித்தார்.
   iv. திரு.வி.கல்யாணசுந்தரம் தொழில் சங்க இயக்கத்தின் தொடக்ககால முன்னோடியாக இருந்தார்.
   அ) i. ii. ஆகியன சரி
   ஆ) i. iii. ஆகியன சரி
   இ) iv. சரி
   ஈ) ii., iii. ஆகியன சரி
4. 1916 ஆம் ஆண்டு ஏப்ரலில் தன்னாட்சி இயக்கத்தை முதலில் தொடங்கியவர் யார்?
   அ) அன்னி பெசன்ட் அம்மையார் ஆ) பிபின் சந்திர பால்
   இ) லாலா லஜபதி ராய் ஈ) திலகர்
5. சிவசுப்ரமணியனார் எங்கு தூக்கிலிடப்பட்டார்?
   அ) கயத்தாறு ஆ) நாகலாபுரம்
   இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி
6. கூற்று : பழங்கள் காய்வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடலில் ஈடுபடுவது தோட்டக்கலைத் துறையாகும்.
   காரணம் : உலகளவில் இந்தியா மா, வாழை மற்றும் சிட்ரஸ் பழவகை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
   இ) கூற்று சரி, காரணம் தவறு
   ஈ) கூற்று தவறு, காரணம் சரி

AADHAVAA PUBLICATIONS 9092109966 www.Padasalai.Net

For Orders Plz Contact : 90921 09966

**7. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை ________.**
அ) 3 மற்றும் 15 ஆ) 4 மற்றும் 16
இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15

**8. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம் ________.**
அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு

**9. எளிதில் செல்லமுடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து. ________.**
அ) சாலைப் போக்குவரத்து ஆ) இரயில் போக்குவரத்து
இ) வான்வழிப் போக்குவரத்து ஈ) நீர்வழிப் போக்குவரத்து

**10. பின்னடையும் பருவக்காற்று ________ லிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது**
அ) அரபிக்கடல் ஆ) வங்கக் கடல்
இ) இந்தியப் பெருங்கடல் ஈ) தைமுர்க்கடல்

**11. மாறுபட்ட ஒன்றினைக் கண்டுபிடி ________**
அ) வருமான வரி ஆ) சொத்து வரி இ) நிறுவன வரி ஈ) பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி

**12. ________பகுதியானது பட்டாசு மற்றும் அச்சிடும் தொழிலில் நாட்டின் சிறந்த நகரமாகத் திகழ்கிறது.**
அ) சிவகாசி ஆ) ஆலத்தூர் இ) சேதுபுரம் ஈ) ராஜபாளையம்

**13. காட் (GATT) -இன் முதல் சுற்று நடைபெற்ற இடம் ________.**
அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே ஈ) ஜெனீவா

**14. கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?**
அ) ஆந்திரப்பிரதேசம் ஆ) தெலுங்கானா இ) தமிழ்நாடு ஈ) உத்திரப்பிரதேசம்

## பகுதி – II

குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **10x2=20**
ii) 28 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

15. ஜப்பான் இந்தியா உற்பத்தி நிறுவனத்தின் (JIM) பங்கு என்ன?
16. "டாலர் ஏகாதிபத்தியம்" தெளிவுபட விளக்குக.
17. முதல் உலகப்போருக்கு பின்னர் ஜெர்மனிக்கு ஏற்பட்ட ஏதாவது இரண்டு பிரச்சனைகளைக் குறிப்பிடவும்.
18. டீன்பிகா – குறிப்பு வரைக.
19. ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்பப் பெற்றார்?
20. மாஞ்சாரல் - குறிப்பு வரைக.
21. கிலாபத் இயக்கம் உருவானதற்கான காரணம் என்ன?
22. படிக்கட்டு முறை வேளாண்மை பற்றி சிறு குறிப்பு வரைக
23. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.
24. கால்நடைகள் என்றால் என்ன?
25. புதிய விவசாயக் கொள்கை வடிவமைக்கப்பட்டதின் காரணங்களை எழுதுக.
26. 'தேரி' என்றால் என்ன?
27. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.
28. வரி ஏய்ப்பு என்றால் என்ன?

## பகுதி – III

குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **10x5=50**
ii) 42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

**29. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | வேலூர் புரட்சி | - | தேயிலை |
| 2. | பெருங்கலகம் | - | காபி |
| 3. | ரொபஸ்டா | - | உணவு தானியங்கள் |
| 4. | பூகி | - | 1806 |
| 5. | தாங்கியிருப்பு | - | 1857 |

**30. அ) வேறுபடுத்துக.**
i) மேற்குக் கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்குக் கடற்கரைச் சமவெளி
ii) அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்

AADHAVAA PUBLICATIONS 9092109966 www.Padasalai.Net

For Orders Plz Contact : 90921 09966

**ஆ) காரணம் கூறுக.**

மழைநீர் சேமிப்பு அவசியம்

31. பொது விநியோக முறையை விவரிக்கவும்.
32. இந்திய விவசாயிகள் எதிர்க்கொள்ளும் ஏதேனும் ஐந்து முக்கிய சவால்களை எழுதுக
33. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக .
34. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் எவை?
35. 1905 ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காளப் பிரிவினையின் போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்து கொண்டனர்?
36. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக
37. தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
38. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை திறனாய்வு செய்க.
39. உலகமயமாக்களின் வரலாறு குறித்து விவரிக்கவும்.
40. தமிழ் மறுமலர்ச்சிக்கு மறைமலை அடிகள் ஆற்றிய பங்கினை விளக்குக.

**குறிப்பு: பார்வை மாற்று திறனாளி மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.**

41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.

1920 முதல் 1940 வரையிலான இந்திய வரலாற்றில் நடைபெற்ற ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

42. உலகவரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

i. சான்பிரான்சிஸ்கோ
ii. கனடா
iii. கிரீஸ்
iv. இங்கிலாந்து
v. மாஸ்கோ

## பகுதி – IV

**குறிப்பு: இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2x8=16**

43. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு,செயல்பாடுகளை ஆய்வு செய்க (or)

i) இரண்டாம் உலகப்போரின் போது முத்துத் துறைமுகம் தாக்கப்பட்ட நிகழ்வு எங்கனம் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்தது?

ii) 1857 பெருங்கலகத்தின் தோல்விக்கான காரணங்களைப் பட்டியலிடுக.

**44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

1. மாளவ பீடபூமி
2. கரிசல் மண் பகுதி
3. சாத்புரா மலைத்தொடர்
4. எவரெஸ்ட்
5. குறைவான மழைபெறும் பகுதி
6. நர்மதை ஆறு
7. காவிரி டெல்டா
8. கொல்கத்தா to சென்னை நீர்வழிப் போக்குவரத்து

(or)

**கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

1. வைகை ஆறு
2. ராமேஸ்வரம்
3. முக்குருதி ஏரி
4. கூடங்குளம்
5. அமராவதி அணை
6. அரபிக் கடல்
7. பருத்தி விளையும் பகுதி
8. நாகபட்டினம் to சென்னை கடல்வழி போக்குவரத்து

AADHAVAA PUBLICATIONS 9092109966 www.Padasalai.Net

AADHAVAA PUBLICATIONS

www.Padasalai.Net

For Orders Plz Contact : 90921 09966